# "ரப்பரும் தமிழரும்" கவிதையைக் கேலிச்சித்திரம் கொண்டு கற்பித்தல் Teaching "Rapparum Tamilarum" poem using caricature

திவாகர் மணிவண்ணன் | Dhiwahar Manivanan

Student of Tamil Department, Sultan Idris Educational University, Malaysia
dhiwamani1612@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழிப்பாடம் கற்பித்தலில், புதிய சிந்தனையுடன் ஆசிரியர்கள் தங்களின் கற்றல், கற்பித்தலை நடத்தும் தமிழ் ஆசிரியர்கள் மிகக் குறைவு. இப்போதெல்லாம் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ் மொழியைக் கற்பிப்பது மிகவும் எளிது. இந்தக் கட்டுரையில் கேலிச்சித்திரம் பயன்படுத்தி, தமிழ் இலக்கியம் SPM பாடத்திட்டத்தில் ஒரு கவிதையை எப்படிக் கற்பிப்பது என்பதை விளக்குகிறது. மேலும், இந்தக் கட்டுரை ஒரு கேலிசித்திரத்தை எவ்வாறு உருவாக்குவது, அதன் பயன்பாடு மற்றும் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவற்றையும் எடுத்துரைக்கின்றது.

**Abstract**

In Tamil language teaching, there are very few Tamil writers who conduct their learning and teaching with new thinking. Nowadays it is very easy to teach Tamil language with the help of technology. This article explained how to teach a poem in the Tamil Literature SPM curriculum using a cartoon. Also, this article will explain how to create a caricature, its application, and the tools used.

**திறவுச்சொற்கள் (Keywords)** : தொழில்நுட்பம், இலக்கியம், கேலிச்சித்திரம், Caricature, Technology, Tamil poem, Teaching

## முன்னுரை

தமிழ்மொழி கற்பித்தலில் தமிழாசிரியர்கள் புத்தாக்கச் சிந்தனை கொண்டு தங்களின் கற்றல் கற்பித்தலை நடத்துவது என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. தற்காலத்தில் மிகவும் இலகுவாகவே தொழில்நுட்பத் துணைக்கொண்டு தமிழ் மொழிக் கற்பித்தல் இருந்து வருகின்றது. இக்கட்டுரையில் தொழில்நுட்பம் கொண்டு எஸ்.பி.எம் தமிழ் இலக்கியப் பாடத்திட்டத்தில் உள்ள கவிதை ஒன்றனைக் கேலிச்சித்திரம் (Cartoon) கொண்டு கற்பிப்பது எவ்வாறு என்று விளக்கப்படும். மேலும், இக்கட்டுரையில் கேலிச்சித்திரம் எப்படி உருவாக்குவது, அதன் பயன்பாடு, பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் விவரிக்கப்படும்.

**தமிழ் இலக்கியம் கற்றல் & கற்பித்தல்**

தமிழ் இலக்கியப் பாடம் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்குத் தற்போது வந்துள்ளது. இப்பாடத்திற்குத் தேவையான பாட நூல்களை மலேசியத் தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்து வழங்குகின்றது. இப்பாடத்திற்கு ஒரு நாவல், ஒரு நாடகம், தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகள் ஆகியவற்றை மலேசியத் தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்றது (சாமிகண்ணு, கிங்ஸ்டன்; 2018).

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளில் ஒன்றான 'ரப்பரும் தமிழனும்' என்ற கவிதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கவிதையை சா. ஆ. அன்பானந்தன் எழுதியுள்ளார். இக்கவிதையைக் கீழே காணலாம்.

எங்கிருந்தோ தமிழனைப்போ லிங்கெழுந்து
நிலம்பார்த்துத் தன்னை ஊன்றித்
தங்கமகன் ஒளியாலும் கங்கையவள்
அருளாலும் செம்மை ஊறி
மங்களமாய் இலைவிரித்து மலர்ந்தாளாம்
ரப்பர்எனும் மங்கை; பேர்த்துக்
தங்கமுடி மணிவைத்தால் போல்நிரையில்
வைத்திட்டார் செல்வம் பெற்றார்.

சங்குநிறப் பால்பொழியும் தங்கமரச்
செல்வங்கள் சொட்ட ஈந்து
தங்கடமை முடித்துவிட்டுத் தனையழிக்கக்
கொடுத்துவிட்டுச் சாய்தல் போலச்
செங்குருதி நீராக்கிச் செம்புடலை
உரமாக்கிச் சாய்ந்து போக
அங்கிருந்து வந்தானோ? அவனுக்கும்
ரப்பருக்கும் மாற்றம் காணேன்!

(தமிழ் இலக்கியம் கவிதைத் தொகுப்பு; பக்: 21)

இந்தக் கவிதை, 1.4 கவிதையிலுள்ள நயத்தை விளக்குவர் எனும் உள்ளடக்கத் தரத்தினைக் கொண்டுள்ளது. இதன் கற்றல் தரம் 1.4 கவிதையிலுள்ள பொருள் நயம் ஆராய்ந்து விளங்குவர். குறிப்பாக, தெரிநிலை புதைநிலை கருத்தினை மாணவர்கள் அறிதல் வேண்டும் என்பதைத் தமிழ்ப் பிரிவு கல்வி கலைத்திட்டம் வகுத்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு புத்தாக்கச் சிந்தனையில் கற்றல் கற்பித்தலை அணுகும் கருவியினைக் அடுத்து காணலாம்.

**பயன்படுத்தப்பட்ட கருவி (Apps)**

நான் மேற்கண்ட கவிதையைக் கற்றுக் கொடுக்க கேலிச்சித்திரம், யுட்யூப் (Youtube) பயன்படுத்தினேன்.

**கேலிச்சித்திரம்**

மலாயக மக்களின் தோட்ட வாழ்க்கை மையப்படுத்திய ஒரு கேலிச்சித்திரம் முன்பே இருந்தது. அந்தக் கேலிச்சித்திரத்தின் பெயர் "எஸ்டேட் பாய்" (estet boy). அதில் தோட்டம், தோட்டப்புறப் பள்ளி போன்ற கூறுகளின் அடிப்படையில் கேலிச்சித்திரம் அமையப் பெற்றிருக்கும். எனவே, ரப்பரும் தமிழரும் என்ற கவிதையும் தமிழர்கள் தோட்டப்புற வாழ்க்கையினைக் காட்டும் கவிதை என்பதால் அதற்குச் சரியான கேலிசித்திரமாக "எஸ்டேட் பாய்" (estet boy) பயன்படுத்தப்பட்டது. பள்ளிச் சூழலும், மாணவர்களின் துவங்கல், ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் முறை போன்ற அம்சங்கள் இக்கேலிசித்திரத்தில் இருப்பதால் ஓர் ஆசிரியர் இக்கவிதையினைக் கற்றுக் கொடுப்பது போல் அமையப் பெற்றுள்ளது.




(படம் 1: ஆசிரியர் கற்றுக் கொடுப்பது போன்ற கேலிச்சித்திரம்)

**யுட்யூப் (Youtube)**


கேலிச்சித்திரத்தை எடுத்த- பின், அதனைத் தொகுத்து யுட்யூப் (Youtube) பதிவிட வேண்டும். யுட்யூப் (Youtube) உள்ள சில பால் மரம் சீவும் காட்சிகளையும் இதனுள் உட்படுத்த வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**

"எஸ்டேட் பாய்" (estet boy) கேலிச்சித்திரம் எடுத்து, filmora என்ற செயலின் வழி தேவையான கேலிசித்திரத்தைத் தொகுக்க வேண்டும். அந்தக் கேலிச்சித்திரத்தின் குரலினை அழிக்க வேண்டும். அதற்குக் காரணம் யாதெனில் "எஸ்டேட் பாய்" (estet boy) கேலிச்சித்திரத்தில்

பேசப்படுவது வேறொன்றாகும். அது தேவையான ஒன்றும் இல்லை. அந்தக் குரலினை அழித்து விட்டுச் சரியான மற்றும் தேவையான நபர்களின் குரலினை நாம் சுயமாக filmora செயலில் இணைக்க வேண்டும். சான்றாக, இக்கவிதையைக் கற்றுக் கொடுப்பது பெண் ஆசிரியராக இருப்பார். அவரின் குரலுக்கு ஒரு பெண் குரல் தேவைப்படும். அதே போல் மாணவர்களின் குரலுக்கு மாணவர்கள் வயதிலுள்ள குரல் தேவைப்படும். இதனால், பேச வேண்டிய வசனங்களை எழுதி, பின் குரல் பதிவு செய்பவரிடம் எழுதிய வசனங்களை வழங்க வேண்டும். அவர்கள் குரல் பதிவு செய்தவுடன் filmora செயலில் இணைக்கலாம். பிறகு, அந்தக் காணொளியை யுட்யூப் (Youtube) பதிவிடலாம். இதை blogger என்ற தளத்திலும் பதிவேற்றலாம். எடுத்துக்காட்டாக,



மேற்கண்ட காணொளியின் துணைக்கொண்டு மாணவர்கள் blogger கீழே வழங்கப்பட்டுள்ள இணையப் பாரத்தில் பதில்களை அளிக்கலாம். கேள்விகள் யாவும் கற்றல் தரத்தின் அடிப்படையில் கேட்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சரியான விடைகளையும் அளிக்க முடியும்.

இந்தக் கேலிச்சித்திரம் கொண்டு காணொளியை மறுபதிவு செய்வது கடினமான ஒன்றாகும். பதிவு செய்யும் குரலின் ஏற்றத்தாழ்வு (tone of voice) கேலிச்சித்திரத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் நேரத்தில் பல்வேறு சிக்கல் எதிர்நோக்குவோம். முக்கியமாக, கேலிசித்திரத்தில் இருக்கக் கூடிய சித்திரங்களின் அசைவு யாவும் குரலுக்கு ஏற்ப அமைத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் கேலிச்சித்திரம் நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும். மாணவர்களும் சலிப்பின்றிக் கேலிச்சித்திரத்தைக் கண்டு களிக்கலாம்.

**முடிவுரை**

இந்தக் காணொளி செய்வதில் பல்வேறு சிக்கலை எதிர்நோக்கினாலும் வருங்கால ஆசிரியர்கள் இதுபோன்ற புத்தாக்கச் சிந்தனையுடன் பல்வேறு செயலிகளைப் பயன்படுத்திக் கற்றலின் உத்தி முறைகளை மாற்றி அமைக்கலாம். இதனால், மாணவர்களும் தற்போதைய சூழலில் நிலவி வரும் கோவிட்-19 நேரத்தில் வீட்டில் இருந்தவாறே இதுபோன்ற காணொளிகளைக் கண்டுகளித்து தனது அறிவினைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

**துணைநின்றவை**


- சாமிக்கண்ணு ஜெபமணி, ஈசா., கிங்ஸ்டன் பால், த. (2018). *மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு*. சென்னை: நவநீதம் எண்டர் பிரைசஸ்.
- முரசு, நெடு. (2016). *கவிதைத் தொகுப்பு தமிழ் இலக்கியம்*. மலேசியா: அருள்மதியம் பதிப்பகம்.
- பச்சைபாலன், ந. (2016). *எஸ். பி. எம் தமிழ் இலக்கியம் தேர்வுக் களஞ்சியம்*. மலேசியா: தமிழ் இலக்கிய ஆசிரியர் கழகம்.
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142- 147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT), 12 (9), 1305-1317.

- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers-a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE-ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.


******************

# கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு
# Education awareness in Poet vairamuthu poems

ஏ.சிவசங்கரி | A. Sivasangari

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம் -8*
Premalathajawahar29@gmail.com, https://orcid.org/0000-0002-7746-0035


## ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாறு சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாறுடையதாகவும் இதற்கு முன் பரந்துபட்ட படைப்புகளை உடையதாகவும் உள்ளது. தமிழ் இலக்கியம் சங்க கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என மூவகையுடைத்து. இதில் தற்கால இலக்கியங்களில் ஒன்றான புதுக்கவிதையில் கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. அரசின் கல்விக் கொள்கைகள் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே செயல்படுத்தப்படுகின்றன. இதைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மூன்று தரப்பாருக்கு உள்ளது. முதலில் ஆசிரியர். அடுத்து பெற்றோர். மூன்றாவது மாணவர். வைரமுத்துவின் பார்வையில் இவை ஆராயப்படுகின்றன.

## Abstract

The history of Tamil literature is about three thousand years old and has a wide range of works before it. Tamil literature is divided into three types as Sangam period literature, medieval